**நீர்கொழும்பு மாநகர சபை - 2023**
**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

நீர்கொழும்பு மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, நீர்கொழும்பு மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தியில் 1.6.2(ஏ,ஐ), 1.6.3(அ) மற்றும் 1.6.4 ஆகிய அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் இலக்கம் 3.28 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.2 இற்கு இணங்க செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் ஏற்பட்ட காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது ரூபா 289,768,000 தொகை மேற்கொள்ளப்பட்டிருந்த சீராக்கல் எது | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என. | நியமத்தின் படி சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மிகையுடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்த முதலீட்டு வருமானம் ரூபா 22,986,375 தொகை மீண்டும் சீராக்கல் செய்யப்பட்டிருக்காததுடன் மிகையுடன் சீராக்கல் செய்திருக்காத ரூபா 1,332,215 தொகை மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்பட்ட மூலதனச் செலவு மானியங்கள் என சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும், மிகையுடன் கூட்டப்பட வேண்டிய ஆண்டிற்கான கடன் வட்டிச் செலவு ரூபா 11,362,763 தொகை கழிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நியமத்தின் இலக்கம் 3.29 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.3 இற்கு இணங்க முதலீட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் கிடைத்த காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது கிடைத்த வட்டி ரூபா 22,986,375 தொகைக்கு பதிலாக செலுத்திய வட்டி பெறுமதியாகிய ரூபா 11,362,763 தொகை கிடைத்த வட்டி என காட்டப்பட்டிருந்ததுடன், ரூபா 19,777,602 இற்கான நாட்குறிப்பு பதிவின் மூலம் மாற்றுதல் உட்பட ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பணம் உள்ளீடு என ரூபா 33,988,649 தொகை காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நியமத்தின் இலக்கம் 3.30 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.4 இற்கு இணங்க நிதித் தொழிற்பாடுகளின் மூலமான காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது கிடைத்த மூலதனச் செலவு மானியம் ரூபா 15,538,788 தொகையாக இருந்த போதிலும், ரூபா 6,542,130 தொகையென காட்டப்பட்டிருந்ததுடன் நீண்ட கால கடனுக்கான வட்டி கொடுப்பனவுகள் ரூபா 11,362,763 தொகை காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (ஈ) 2021 பெப்ரவரி 12 திகதிய இலக்கம் LGD/10A/4/ந.கி/2019 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிலையான சொத்துக்கள் 14 தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் சரியான விடயங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 29,020,464 தொகை ஏனையவைகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 ஆண்டில் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட ரூபா 388,770,000 தொகையான மோட்டார் வாகனங்கள் மற்றும் ரூபா 7,047,317 தொகைக்கான கட்டிடங்களுக்காக மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 176,183 தொகை மற்றும் ரூபா 15,550,800 தொகை என ரூபா 15,726,983 இற்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கம் மேற்கொண்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது அகல்விரிவான வருமானக் கூற்றில் செலவுகள் என இனங்கண்டிருந்த மூலதனச் செலவுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 109,421,830 தொகை ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் இந்த சொத்துக்களை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (இ) 2022 ஆண்டின் போது செலவுகள் என இனங்கண்டிருந்த பெறுமதியினால் மூலதன செலவுகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 26,809,691 தொகை ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபையினால் 09 உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 140,000 தொகைக்கான பிணை வைப்பு தொகையினை ஊழியர் பிணை வைப்புக் கணக்கில் காட்டப்படாமல் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகையை மூதலீடு செய்தல் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்புக் கணக்கு ஆரம்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 22,282,598 தொகை எனினும், ரூபா 22,986,375 தொகை என ரூபா 703,777 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் சபை ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த 08 மூலதனச் செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 9,323,789 தொகை பெறுமதியை மூலதனப்படுத்தாமல் மீண்டுவரும் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 6,611,719 தொகை மாத்திரம் மூலதனச் செலவாக காணப்படுவதுடன், அதனை 2024 இல் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (எ) | முன்னைய ஆண்டின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத மின் பிறப்பாக்கியொன்று கொள்வனவு செய்வதற்கான 06 மூலதனச் செயற்திட்டங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 107,634,195 தொகை பூர்த்தி செய்யப்படாதவை என மூலதனப்படுத்துவதற்கு பதிலாக மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தென கணக்காய்வினால் முன்னைய ஆண்டில் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அத் தவறினை சரி செய்திருக்கவில்லை. | அடுத்த ஆண்டு அந்த சொத்துக்களை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஏ) | 2022 ஆண்டின் திசெம்பர் 31 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வளங்கள் மீள்சுழற்சி நிலையத்தின் வேலைகளின் பெறுமதியாகிய ரூபா 32,503,669 தொகை ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை என முன்னைய ஆண்டின் போது சுட்டிக்காட்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போதும் அந்தத் தவறினை சரி செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் கூட்டுத்தொகை நிதிக்கூற்றுக்களின் 13 கணக்கு மீதிகள் இடையே ரூபா 62,427,644 தொகைக்கான இணங்கியிருக்காத வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இருப்புக்களுக்குரிய அட்டவணைகள், களஞ்சிய இருப்பு பதிவேட்டுடன் இணக்கஞ் செய்த போது 9,972 இருப்பு அலகுகளின் பெறுமதியாகிய ரூபா 12,533,395 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய ஏனைய தண்டம் | 371,636 | அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | பல வருட காலம் முதல் காணப்படுகின்ற மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்காய்விற்கான சான்றுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய மின்சாரக் கட்டணம் | 31,310 | அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | பல வருட காலம் முதல் காணப்படுகின்ற மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு | கணக்காய்விற்கான சான்றுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வருவதுடன் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (இ) | பெற வேண்டிய நிருவாகக் கட்டணம் | 39,864 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | பெற வேண்டிய முதலீட்டு வட்டி | 4,550,996 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | செலுத்த வேண்டிய ஓய்வுதிய பங்களிப்புத் தொகை | 625,384 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 1,000 | அட்டவணை | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | பாதைகளும் பாலங்களும் | 69,878,724 | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணைகள் | புதிலளிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (ஏ) | பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திரங்கள் | 125,352,316 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | ஏனைய சொத்துக்கள் | 28,158,184 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | உத்தியோகபூர்வ வாசஸ்தள வாடகை | 453,242 | காலப் பகுப்பாய்வு | அட்டவணை இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | - மேற்படி - |
| (ஓ) | செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரி | 5,194,235 | அட்டவணை | - மேற்படி - | - மேற்படி - |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் அத்தியாயம் VII பிரிவு 38(2) | நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றது எனவும், அந்த முறைமையை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்பட வேண்டிய எழுத்துமூல மீளாய்வின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 24 திகதிய மாநகர சபை நிதி நிருவாகம் தொடர்பான கணக்கு அலுவல்கள் தொடர்பான கட்டளைகள் | | | |
| I. | 395 | கட்டளையின் படி வாடகைக்கு கொடுப்பதற்காக பஞ்சாங்க வருடமொன்றை அடிப்படையாக எடுக்க வேண்டியிருந்த போதிலும், 07 இறைச்சிக் கடைகள் தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட வாடகைக்கு எடுப்பவர்களுடன் 2022 ஜூலை 01 முதல் 2023 ஜூன் 30 திகதி வரையான ஒரு வருட காலத்திற்காகவும் பின்னர் 2023 ஜூலை 01 திகதி முதல் 2024 ஜூன் 30 திகதி வரையான ஒரு வருட காலத்திற்காகவும் உடன்படிக்கை | பதிலளிக்கப்படவில்லை. | குறிப்பிட்ட விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொண்டிருந்ததுடன், ராஜபக்ஷ பூங்காவின் ஐஸ்கிரீம் விற்பனை நிலையம் 2022/2024 ஆண்டிற்காக வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக பஞ்சாங்க வருடத்தை அடிப்படையாக கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| II. | 398 மற்றும் 409 | கொச்சிக்கடை நூலகக் கட்டிட தரைமாடி கடையறைகளின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,500,000 தொகை என தீர்மானிப்பதற்காக பட்டய பெறுமதி மதிப்பாளர் ஒருவரின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாக கொண்டிருக்காததுடன், 2020 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை 07 இறைச்சிக் கடைகளை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக அவ்வாறு பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி. 486 | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 12 இன் கீழ் காட்டப்பட்டிருந்த 52 மதிப்பளிக்கப்படாத காசோலைகளில் ரூபா 878,157 தொகை பெறுமதியான 50 காசோலைகள் 10 வருடங்களை விட பழைமை வாய்ந்த மீதிகளாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது அந்த மீதியை தீர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) நி.பி. 571 (2) | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 12,243,285 தொகை காலவதியாகிய வைப்புக்களை ஆதவழிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| | (iii) நி.பி. 880 | பிரமாணங்களுக்கு இணங்க செயற்படுவதற்காக சபையின் ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர் தவிர பிணை வைக்க வேண்டிய ஏனைய உத்தியோகத்தர்கள் யார் என இனங்கண்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2020 திசெம்பர் 03 திகதிய LGD/13/2016/(i) இலக்கம் கொண்ட உள்ளூராட்சி சுற்றறிக்கை | உடன்படிக்கை மேற்கொண்ட நாள் முதல் ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் ஒரு முறை மாதாந்த வாடகையை அரச பெறுமதி மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் படி திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் எப். கடைக் கட்டிடத் தொகுதியின் கடையறை வாடகை பெறுமதி மதிப்பீடு 2017 ஆண்டின் போது கொச்சிக்கடை நூலகக் கட்டிடத்தின் தரை மாடி கடையறைகளுக்கான வாடகை 2018 ஆண்டின் போதே இறுதியாக திருத்தப்பட்டிருந்ததது. மேலும், கெல்டன் ஹோட்டலுக்கு அண்மையிலுள்ள கடைக் கட்டிட தொகுதியில் கடையறைகளை வாடகைக்கு கொடுப்பதற்காக 2008 ஒக்தோபர் 17 திகதி நீர்கொழும்பு மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 1,680 தொகையிலிருந்து ரூபா 6,450 தொகைக்கு இடைப்பட்ட வீச்சில் மாதாந்த வாடகை ஒன்று அறவிடப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட சுற்றறிக்கை இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 204,958,275 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 12,401,464 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 167,173 | 196,520 | 167,191 | 244,198 | 166,010 | 173,466 | 150,839 | 22,627 |
| (ii) | வாடகை | 88,791 | 86,355 | 86,873 | 39,103 | 96,552 | 72,777 | 71,667 | 1,110 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 15,956 | 23,997 | 24,060 | 2,299 | 16,722 | 16,861 | 16,851 | 10 |
| (iv) | ஏனைய வரு மானங்கள் | 828,788 | 824,451 | 829,386 | 15,692 | 932,912 | 739,011 | 730,397 | 8,614 |
| | மொத்தம் | 1,100,708 | 1,131,323 | 1,107,510 | 301,292 | 1,212,196 | 1,002,115 | 969,754 | 32,361 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் வீதவரி மற்றும் வரி சிட்டையிடப்பட்ட வருமானம், மதிப்பீட்டு | பதிலளிக்கப்படவில்லை. | தத்துருபமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தை விட முறையே ரூபா 7,456 மில்லியன் தொகை மற்றும் ரூபா 29,347 மில்லியன் தொகை அதிகரித்திருந்தது. அது மதிப்பீட்டு வருமானத்தில் 5 சதவீதம் முதல் 18 சதவீதம் வரை 260 சதவீத அதிகரிப்பு காணப்பட்டதனால் முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டில் மதிப்பீட்டு வருமானத்தை விட சிட்டையிடப்பட்ட வருமானத்தின் அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது. எனினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது சிட்டையிடப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானம் 87 சதவீதத்திலிருந்து 85 சதவீதம் வரை குறைவடைதல் ஒன்று ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஏனைய வருமானங்களில் சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பீட்டு வருமானத்துடன் ஒப்பீடு செய்யும் போது சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 4,336 மில்லியனினால் குறைவடைலும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 598 மில்லியனினால் அதிகரித்தலும் ஏற்பட்டிருந்தது. அதன்படி, மதிப்பீடு செய்தல் தத்துரூபமாக மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்களை நிறைவேற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 267(1) இற்கு இணங்க இந்த கட்டளைச் சட்டத்தின் கொள்கைகள் மற்றும் ஏற்பாடுகளை செயற்படுத்தும் கருமங்களுக்காக தேவையென கருதும் துணைச் சட்டங்கள் காலத்துக்குக் காலம் தயாரிக்கக் கூடியதாக இருந்த போதிலும் மற்றும் அந்த கட்டளைச் சட்டத்தின் பிரிவு 272(12) பிரகாரம் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்தல் மற்றும் வீதவரி மற்றும் வரிகளை சேகரித்தல் உட்பட வருமானத்திற்காக மாநகர சபையினால் துணைச் சட்டங்கள் சட்டவாக்கம் செய்யக்கூடியதாக | கடையறைகளை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக நீர்கொழும்பு மாநகர சபையினால் துணைச் சட்டங்கள் சட்டவாக்கம் செய்திருக்காத போதிலும், 2016 ஆண்டு முதல் உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் கௌரவ ஆளுனர்களின் ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கை அறிவுரைகள் மற்றும் தீர்மானங்களின் படி செயற்படுத்தப்படுகின்றது என. | கட்டளைச் சட்டத்திற்கு இணங்க துணைச் சட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான கடையறைகளை வாடகைக்கு கொடுக்கும் போது முறைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதலுக்காக துணை சட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக துணைச் சட்டமொன்று விதித்திருக்கவில்லை. | மேல் மாகாண திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நியதிச் சட்டம் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்துக்குரிய அனைத்து அலுவல்களும் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி மேற்கொள்ளப்படுகின்றது என. | துணைச் சட்டங்கள் தயாரிக்க வேண்டும். |
| (இ) | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவுகள் 272(13) மற்றும் (28)(ஊ) படி ராஜபக்ஷ பூங்காவில் புகைப் படப்பிடிப்புக் கட்டணத்திற்காக துணைச் சட்டமொன்று ஆக்கியிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | துணைச் சட்டங்கள் தயாரிக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 பெப்ரவரி 01 திகதி இலக்கம் LGD/10A/4/ந.கி/2019 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்திற்கு இணங்க அனைத்துச் சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் காணிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள், பொருத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திரங்கள் கணினிகள், துணைக்கருவிகள், மென்பொருட்கள், பாதைகள், பாலங்கள் மற்றும் மதகுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய ஏனைய சொத்துக்களை இனங்கண்டு மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | காணிகள் கட்டிடங்கள் பாதைகள் பாலங்கள் மற்றும் மதகுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திரங்கள், கணினிகள், துணைக் கருவிகள், மென்பொருட்கள் என்பன எதிர்காலத்தில் மீள்மதிப்பீடு செய்யப்படவுள்ளது என. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் சந்தைப் பெறுமதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்து திறன் மதிப்பு என இனங்காண்பதற்கு பதிலாக சபைக்குச் சொந்தமான 26 கட்டிடங்களுக்கான வீதவரி அறவீடு செய்வதற்காக வருமானப் பரிசோதகர்களினால் வழங்கியிருந்த ரூபா 7,047,317 இற்கான வருடாந்த பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாளாந்த சந்தையின் 116 கடையறைகளை வாடகைக்கு கொடுக்கும் போது மாநகர சபை நிதி நிருவாகத்துக்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான கட்டளை 411(iii) படி அந்த கடையறைகளை வாடகைக்கு கொடுக்கும் போது மாநகர சபை மற்றும் வாடகைக்கு எடுப்போருடன் முறைப் பிரகாரம் உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்கவில்லை எனவும், கடைகளை வாடகைக்கு எடுப்போருக்கு வியாபாரம் செய்வதற்காக அனுமதிப்பத்திரமொன்று மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டதுடன், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 112 கடையறைகளின் நிலுவை கடை வாடகை ரூபா 4,020,758 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | 2023 ஜுலை 31 திகதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 4,008,209 தொகையினை சேர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை கடை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | எப். கடை கட்டிடத் தொகுதியின் 69 கடையறைகளை வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக 10 கடையறைகளின் தெரிவுப் பரிசோதனையின் போது 06 கடையறைகளுக்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 59 அறைகளில் இருந்து நிலுவை கடை வாடகை ரூபா 2,049,584 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொச்சிக்கடை நூலகக் கட்டிடத்தின் தரைமாடிக் கடையறைகள் ஒரே தடவையில் பெறப்படும் பணம் அடிப்படையில் நீண்ட கால வாடகை அடிப்படையாக வாடகைக்கு கொடுப்பதற்கு 2015 செப்தம்பர் 21 திகதி 04 டென்டர்காரர்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,500 தொகைக்கான தற்காலிக பெறுமதி மதிப்பீடு ஒன்றின் மீது 2016 ஜூன் 02 திகதி முதல் அனுபவிக்கும் உரிமை வழங்கப்பட்டிருந்ததுடன், 03 கடையறைகளுக்கான ரூபா 108,150,700 இற்கான கடை வாடகை நிலுவை காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 03 திகதிய LGD/13/2016(i) இலக்கம் கொண்ட உள்ளூராட்சி சுற்றறிக்கைக்கு முரணாக கீர்த்திசிங்க பாதையின் கோழி இறைச்சிக் கடை மற்றும் கீர்த்திசிங்க பாதையின் மாட்டிறைச்சிக் கடை 2020 ஆண்டின் போது வழங்கியிருந்த வாடகையாளர்களுக்கே 2020 ஆண்டிற்கான வாடகைத் தொகைக்கு 2021 ஆண்டிற்காகவும் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. 2022 ஜனவரி 01 திகதி முதல் 2022 மார்ச் 31 திகதி வரையும் மீண்டும் 2022 ஜூன் 30 திகதி வரையும் 06 மாதங்களுக்காக முன்னைய வாடகையாளர்களுக்கே வாடகை உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளாமல் டென்டர் செய்முறை ஒன்று இன்றி வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஜூலை 01 திகதி முதல் 2023 ஜூன் 30 திகதி வரையான ஒரு வருட காலப் பகுதிக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், விஸ்த்ரீன் மாவத்தை மாட்டிறைச்சிக் கடை சீல் வைக்கப்பட்டு கரை நிரழ்படுத்தப்பட்டிருந்த வாடகையாளரிடம் 2023 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 105,390 இற்கான நிலுவைத் தொகையொன்றினை அறவீடு செய்வதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுகைக் கருமத்திற்காக ஒரு குறிப்பிட்ட காலம் தேவைப்படுவதனால் 2020 ஆண்டு வாடகையாளருக்கே அந்த தொகைக்கு வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ராஜபக்ஷ பூங்காவில் ஐஸ்கிரீம் விற்பனை நிலையம் 2022/2024 ஆண்டுகளுக்காக வாடகை கொடுத்தல் தொடர்பாக டென்டர் கருமங்களுக்காக நிரந்தர அல்லது சந்தர்ப்பத்துக்கு ஏற்ற டென்டர் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருக்காததுடன் டென்டர் அழைப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட வாடகையாளருக்கு 2022 ஒக்தோபர் 28 திகதி ஐஸ்கிரீம் விற்பனை நிலையத்தை திறப்பதற்காக சாவி ஒப்படைக்கப்படாமல் பழைய குத்தகையாளருக்கே வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையினால் ஐஸ்கிரீம் விற்பனை நிலையத்தை திறத்தல் 08 மாதம் காலதாமதம் ஏற்பட்டிருந்தமையால் சபை இழந்திருந்த வாடகைத் தொகை ரூபா 202,404 தொகையாக இருந்தது. | புதிய வாடகையாளர் குறிப்பிட்ட காலப் பகுதியுள் வைப்புத் தொகையை செலுத்தியிருக்காமையால் பழைய வாடகையாளருக்கே வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | நிதி விதிகளுக்கு இணங்க டென்டர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமாக 16 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் காணப்பட்ட போதிலும், அதற்காக பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் 03 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன், 09 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட போதிலும் அதற்கான காரணத்தை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களுக்காக பண்டக் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை. | 2024 ஆண்டின் பண்டக் கணிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 757(2)(ஆ) படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் தீர்மானம் ட மற்றும் ஏ 66 படிவங்களில் பதியப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பின்னர் வழுக்கலுக்கான சீராக்கலை உறுதி செய்யும் பண்டப் பதிவேடு உறுதி சீட்டொன்று மூலம் கோப்பிடப்படுவதற்காக அந்த படிவத்தின் | 2024 ஆண்டின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

பிரதியொன்று அதனொடு தொடர்புடைய திணைக்களத்திற்கு பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட்டு அடுத்த பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணியில் சிரேஷ்ட மட்ட 05 பதவிகளில் 06 வெற்றிடங்களும் 01 பதவியில் மிகையும், மூன்றாம் மட்டத்தில் 02 பதவிகளில் 02 வெற்றிடங்களும் இரண்டாம் மட்ட 14 பதவிகளில் 34 வெற்றிடங்களும், ஆரம்ப மட்ட 14 பதவிகளில் 132 வெற்றிடங்களும் 01 பதவியில் மிகையொன்றும் காணப்பட்டது. | மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 166 ஆகும் என. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிக்கு மேலதிகமாக பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் படி 03 ஆரம்ப மட்ட பதவிகளுக்காக 33 ஊழியர்களும் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 29/2019 இன் படி ஆரம்ப மட்ட பதவியொன்றுக்காக 20 ஊழியர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சரியானது என. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை பேணிச் செல்ல வேண்டும். |
| (இ) | 05 ஆதனங்களை தடைசெய்யும் உத்தியோகத்தர்கள் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 150,000 தொகை பிணைப் பணம் சபையினால் 07 நிலையான வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக 2014 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை சபையின் சடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 117,229 தொகைக்கான வட்டித் தொகை பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. வட்டித் தொகையை மீண்டும் முதலீடு செய்யாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையால் பிணை வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு | பதிலழிக்கப்படவில்லை. | வைப்புக்களை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு திருப்தி செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட காலப் பகுதி இறுதியில் கிடைக்கக்கூடிய நலன்களில் குறைவொன்று ஏற்பட்டிருந்தது. | | |
| (ஈ) | இறந்த, ஓய்வு பெற்ற, சேவையை விட்டுச் சென்றுள்ள, வெளி இடங்களுக்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் ஏனைய காரணங்களினால் 47 உத்தியோகத்தர்களிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு விழா மற்றும் விஷேட முற்பணமாக ரூபா 175,050 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், அவற்றில் 38 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 120,251 இற்கான கடன் மீதி ஒரு வருடத்தை விட பழைமையாக காணப்பட்டது. மேலும், இடர், ஆதன மற்றும் துவிச்சக்கர வண்டிக் கடன் பெற்றுக்கொண்டிருந்த 72 உத்தியோகத்தர்களிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 9,054,670 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அவற்றில் ரூபா 4,386,846 தொகை 45 உத்தியோத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ஒரு வருடத்தை விட மிகையான கடன் மீதியொன்று காணப்பட்டது. எனினும், அந்தக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு அல்லது பதிலளிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |